# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.184/2023

### அ.சா. 3 (LW 3 )

| **பெயர்** | சாதிக் | **தொழில்** | |
|---|---|---|---|
| **த/க பெயர்** | | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **16.09.2025.** |

1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது ரவுண்டு ரோட்டில் குடியிருந்து வருகிறேன். தற்போது வடமதுரையில் பெட்ரோல் பங்கில் வேலை செய்கிறேன். சம்பவத்தின் போது முருகபவனம் பெட்ரோல் பங்கில் வேலை பார்த்தேன். ஆஜர் எதிரியை தெரியாது. கடந்த 08.06.2023 அன்று மதியம் 03.00 மணி இருக்கும் திண்டுக்கல் முருகபவனம் பெட்ரோல் பங்கில் நான் வேலை செய்து கொண்டிருந்த போது நான் முன்னாடி இருக்கும் பெட்ரோல் பம்பில் டீசல் அடித்துக் கொண்டிருந்தேன். அப்போது நான் வாடிக்கையாளரிடம் பணம் பெற்றுக் கொண்டிருந்த போது ஒரு இருசக்கர வாகனம் மிக விரைவாக சென்றது. அதில் 2 நபர்கள் இருந்தார்கள். அவர்களை நான் முதுகு பக்கமாக பார்க்க முடிந்தது. பங்கில் நடுப்பகுதிக்கு வரும் போது அங்கு ஒருவர் வண்டியின் மீது காயத்துடன் கிடந்தார். நான் பயந்து கொண்டு எனது அலுவலகத்திற்கு சென்று விட்டேன். அங்கு விற்பனை மேலாளரிடம் இது குறித்து தகவல் கொடுத்தேன். மேற்படி சம்பவம் குறித்து விற்பனை மேலாளர் பங்க் உரிமையாளருக்கும் , மேலாளருக்கும் தகவல் கொடுத்தார். பின்பு சம்பவ இடத்திற்கு போலிசார் வந்தனர். என்னுடன் மைக்கேல் ஜெயபால் என்பவரும் இருந்தார். நான் வழக்கு சம்மந்தமாக

திண்டுக்கல் நீதித்துறை நடுவர் முன்னிலையில் இரகசிய அறையில் வாக்குமூலம் கொடுத்தேன். தற்போது கூறியதைத்தான் அப்போதும் கூறினேன். போலிசார் என்னை விசாரித்தார்கள். 164 வாக்குமூலத்தில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். **அந்த கையொப்பங்கள் மட்டும் அ.த.சா.ஆ. 3 ஆகும்.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றும் சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். என்ககு எந்த சத்தமும் கேட்கவில்லை. போலிசார் அங்கு வந்து என்ன நடந்தது என்று சொல்லிய பிறகு தான் சம்பவம் பற்றி எனக்கு தெரிய வந்தது என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரங்களைத்தான் போலிசார் விசாரணையிலும், நீதிமன்ற இரகசிய வாக்குமூலத்திலும் சொன்னேன் என்றால் சரிதான்.

மறுவிசாரணை – இல்லை

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P VELMURUGAN

Digitally signed by P VELMURUGAN
Date: 2025.09.16 20:28:31 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.